OS.No. 117/2022

Date : 25.06.2025

Witness Name & Rank – ரவிச்சந்திரன் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவசாய பூமிக்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஐந்து கிலோ மீட்டர் இருக்கும் தாவா சொத்து குறித்து எனக்கு தெளிவாக தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் 4 முதல் 6 பிரதிவாதிகள் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான் இன்றைய வரை அவர்களுக்கும் எங்களுக்கும் நல்ல உறவு முறை உள்ளது என்றால்அளவாக உள்ளது. நான் எனது வழக்கில் எனது உடன்பிறந்தவர்களை என்னுடன் சேர்த்து தரப்பினர்களாக சேர்க்காமல் பிரதிவாதிகளாக ஏன் முன்னிறுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரத்தை தெளிவாக எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரனம் என்றால் 4 ஏக்கர் விவசாய பூமியாகும் அது இல்லாமல் ஒரு வீடு உள்ளது. நான் தாவா சொத்தில் இரண்டு வீடுகள் காட்டியுள்ளேன் என்றால் இல்லை ஒரு வீடு தாபாபா சொத்து ஆதியில் எனது தாத்தா குருவனுக்குன் காட்டியுள்ளேன். தாவா சொத்து ஆதியில் எனது தாத்தா குருவனுக்கு வந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி க.ச. எண். 105/1ல் தென்புறம் எனதுதாத்தாவிற்கு 4.4 ½ நிலமும் வடபுறம் ராமவண்ணான் அவர்களுக்கு 3.62 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.
2. மேற்படி சொத்து உட்பிரவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பூமி சர்வே எண். 105/1 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ன் படி எனது மாமா பாலசுப்பிரமணியம் பழனிசாமி என்பவருக்கு பாக பாத்தியம் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அந்த ஆவணத்தில் சர்வே எண். 105/1 பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே நான் உட்பிரிவை மறைத்து இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் சுப்புலட்சுமி உயிருடன் இருந்து போது 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது எந்த விதமான பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாதி மற்றும் பிரதிவாதிகள் 4 முதல் 6 ஆகியோருக்கு சேர்த்து தான் 1.35 ஏக்கர் என்றால் சரிதான். மீதம் உள்ள 2.70 ஏக்கர் நிலம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 பிரதிவாதியின் தந்தையாகிய பழனிசாமி வா.சா.ஆ. 4 விடுதலைப்பத்திரத்திற்கு பிறகு எனது தாயாருடன் பேசி வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அந்த வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் பழனிசாமிக்கு வடக்கில் 2.70 ஏக்கர் நிலமும் எனது தாயாருக்கு தெற்கில் 1.35 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அன்றைய தினம் முதல் பழனிசாமி குடும்பத்தார் வடக்கில் 2.70 ஏக்கர் நிலத்தில் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரியல்ல. எனது தாயார் உயிருடன் இருந்த போது தெற்கு பகுதியில் கிணறு தோண்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு அடி தோண்டப்பட்டது என்றால் 20 அடி மூடிவிட்டோம். அதில் போர் போடப்பட்டுள்ளது என்றால் முதலில் எனது அப்பா போர் போட்டு அதன் பிறகு தான் கிணறு தோண்டினோம். தாவா சொத்தில் முழுமையாக தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கில் சாலை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

4. சர்வே எண். 106 காலைக்கு கிழக்கே தான் எங்களது சொத்து உள்ளது என்றால் சரிதான். அதேபோல் 111க்கும் வடக்கில் எங்கள் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து விவரம் முற்றிலும் மாறுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் சர்வே எண். 105/1 பி 2 எனவும் வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் எங்களது பூமி 105/1 பி 1 என்றும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உட்பிரிவு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 7 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்து வீடு நத்தம் பகுதி உள்ள வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பட்டா பற்றி தெரியுமா

என்றால் தெரியாது. அதில் 4ம் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் 4 பக்க நீள அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. ஏற்கனவே அந்த வீட்டை வாய்மொழி பாகமாக எனது அம்மாவிற்கு ஒதுக்கியிருந்த நிலையில் அதில் 4ம் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகத்தை ஒத்து வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நிலத்தை அறிவிப்பு வழங்கி தான் அளக்கப்பட்டது என்றால் சரிதான். அன்றைய தினமே வேண்டாம் என தடுத்துவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு அளந்து தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டதை எதிர்த்து மனு கொடுத்திருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்,தேவை ஏற்பட்டால் தாக்கல் செய்வேன். எங்களுக்கு 1.35 ஏக்கர் நிலம் 8 பேருக்கு உள்ளதால் தடம் விட்டு பிரித்தால் எங்களுக்கு பங்கு குறைந்துவிடும் என்பதால் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, தாவா சொத்து என்றும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றும் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்தது என்றால் சரியல்ல. டிசம்பர் 2012ல் வாய்மொழி பாகம் அமுலுக்கு வந்து விட்டது என்றால் சரியல்ல. ஆதலால் தான் எனது தாயார் உயிருடன் இருந்த வரை எந்த வழக்கும் பழனிசாமிக்கு எதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துவிவரம் தவறானது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனவே தான் FMB தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை வாய்மொழி செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/–)K.Yuvaraj,B.A.,B.l.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---

.